முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1471

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.10.2023**, திங்கட்கிழமை

1. தர்ம ராஜனே அரங்கா வாழ்க
தன்னார்வ தொண்டர் படை உலகெலாம் உருவாக்கி
வருங்காலம் ஞான ஆட்சிக்காலமாக
வையகத்தில் அற்புதம் நடத்துகின்ற குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
வையகத்தைக் காக்கும் மகாசக்தியாக
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 22 ம் நாள், 09.10.2023, திங்கட்கிழமை)
தாழ்வில்லா தொண்டர்படை பெருக்கி தரணிஎங்கும் தன்னார்வ தொண்டு நிறைந்த
3. நிறைந்தநல் அன்னதான சேவை
நிலவுலகத்தில் அற்புதம்பட வளர்த்துவர
மண்ணுலகோர் அரங்கன் வழிதேடி
மாதர்மத்தை காத்துவந்தால் போதும்
4. வந்திட உலகில் சடுதி மாற்றம்
வள்ளல்தன்மையாக மாறி நின்று
சிந்தை தெளிவு கண்டு உலகோரெல்லாம்
சித்திமிகு அரங்கன் பாதை சரியென
5. சரியென உலகோர் பின்தொடர்ந்து
சன்மார்க்க நெறிவழி சரணாகதி கொண்டு
வருங்காலம் ஞானிகளாட்சிக் காலமாக
வல்லமையூட்ட உலகோர் இணைய நேரும்
6. நேர்மைகொண்டு அரங்கன் நடத்தும்
நீதிநெறிமார்க்க வழிகள் தன்னை
பெருமைகொண்டு உலகோர் பின்பற்றி வர
பேருலகமெல்லாம் தொண்டர்படை பெருகி

7. பெருகியே அரங்கன் மார்க்கம்
இந்த பேருலகை ஆளும்
முருகப்பெருமான் யானும் வெளிப்பட
முழுமையான ஞான ஆட்சிக்காலம் உதயமாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–